DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 154/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : கற்பகவள்ளி (சார்பு ஆய்வாளர்.) (P.w.9)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of May 2026

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) .

**முதல் விசாரணை :–**

நான் தற்போது தேனி மாவட்ட விரல்ரேகை பதிவு கூடத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.07.2024ம் தேதியன்று விருதுநகர் மாவட்ட விரல்ரேகை பதிவு கூடத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருச்சுழி தாலுகா வி.இலுப்பைகுளம் கிராமத்தில் அமைந்துள்ள வழக்கின் வாதியின் வீட்டிற்குள் கொள்ளை நடந்தது சம்பந்தமாக நரிக்குடி காவல் நிலைய குற்ற எண்.130/2024 BNS பிரிவுகள் 331(3), 305 –ன்படி வழக்கு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட இடத்தில் விரல்

ரேகை பதிவை எடுத்து வருமாறு மாவட்ட துணை கண்காணிப்பாளர் அவர்களின் போன் மூலம் தகவல் தெரிவித்ததின் பேரில் நான் மற்றும் கஸ்தூரி ஆகிய இருவரும் 21.35மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம். சம்பவ இடத்தில் இருந்த இரும்பு பீரோவின் வெளிப்பக்கத்தில் இருந்து இரண்டு விரல்ரேகை பதிவுகள் எடுக்கப்பட்டு அதற்கு K1 , K2 ஆக குறியீடு செய்யப்பட்டது. நிலையத்தில் இருந்து அனுப்பப்பட்ட சந்தேக நபர்களின் கைரேகைகளை ஒப்பீடு செய்து பார்த்ததில் எந்த ஒரு நபர்களின் கைரேகையுடன் ஒத்துப்போகவில்லை என்று சான்று வழங்கினேன். **(நான் வழங்கிய சான்று அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 154/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : நடபாண்டி (மு.நி.கா.) (P.w.8)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of May 2026

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) .

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 08.07.2024ம் தேதியன்று நரிக்குடி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் சேர்ந்தேன். 26.07.2024ம் தேதி இலுப்பைகுளத்தில் உள்ள ஒரு வீடு உடைக்கப்பட்டு திருடுபோனதாக தகவல் வந்தது. அப்போது சார்பு ஆய்வாளர் என்னை 21.08.2024ம் தேதியன்று குற்ற வழக்கு எண்.130/2024 வழக்கு சம்பந்தமாக Mode of offence குறித்து தெரிந்து

கொள்வதற்காக என்னை பழங்குற்றவாளிகளை ஆய்வு செய்து சிறையில் உள்ளார்களா அல்லது வேறு எங்கும் உள்ளார்களா என அறிந்து வர அறிவுறுத்தினார். அதன்படி விசாரணை செய்து மொத்தம் 83 நபர்கள் அடங்கிய விபரத்தினை 04.09.2024ம் தேதி அறிக்கையாக ஆய்வாளரிடம் சமர்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.